III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.296/2021

Deposition of witness for the CW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 20-07-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது சித்திக் | Village | : |
| Father's / Husband's Name | : என்.சாகுல் அமீது | Calling | : |
| Age | : | Taluk | : |

**நீதிமன்ற சாட்சி**

நான் இவ்வழக்கில் 2 ஆம் பிரதிவாதி. 1 ஆம் பிரதிவாதி சாகிதாபீவி சித்திக் என்னுடைய மனைவி. இறந்துபோன முதல் வாதி என்னுடைய மனைவியின் சகோதரர். 3 ஆம் வாதி சாகுல் அமீது என்னுடைய மாமனார். 4 ஆம் வாதி ஹைசராபேகம் முதல் வாதியின் மனைவி. 5 ஆம் வாதி ஹலிமதுசல்மா . 6 ஆம் வாதி மெகரூன்னிசா ஆகியோர் முதல் வாதியின் மகள்கள். 5 ஆம் வாதி தற்பொழுது பெங்களூரிலும், 6 ஆம் வாதி கல்கத்தாவிலும் குடியிருந்து வருகின்றார்கள். நான் தனியார் நிறுவனத்தில் மனிதவள மேம்பாட்டு மேலாளராக பணிபுரிந்து வருகின்றேன். 1 ஆம் வாதி 09.06.2024 இவ்வழக்கு நிலுவையில் இருந்தபொழுது இறந்துபோய் விட்டார். இந்த வழக்கை முதலில் 1 முதல் 3 வாதிகள் சேர்ந்து எங்களுக்கு எதிராக வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கின்ற B அட்டவணை சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும், மற்றும் வழக்கு சொத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்காக இழப்பீடும் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள். வழக்கு நிலுவையில் இருந்த சமயம் முதல் வாதி இறந்த போனதால் 4 முதல் 6 வரையுள்ள வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள். இவ்வழக்கு தற்பொழுது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக இருந்து வருகின்றது, தற்பொழுது பெரியோர்கள் முன்னிலையில் வாதிகளும் பிரதிவாதிகளும் சமாதானம் பேசி ஒரு சமாதான முடிவை எட்டியிருக்கின்றோம். அதன்படி வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கின்ற B அட்டவணை சொத்தில் தற்பொழுது குடியிருந்து வருகின்ற நாங்கள் 31.10.2026 க்குள் வழக்கு

சொத்திலிருந்து காலி செய்து வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், வழக்கு B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எந்த உரிமையையும் கோருவதில்லை என்றும் வழக்கு B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் இதுவரை குடியிருந்து வந்ததற்கான இழப்பீடு எதனையும் வாதிகள் கோருவதில்லை என்றும் பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டது. இதன் அடிப்படையில் இன்று ஒரு கூட்டு சமாதான குறிப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த குறிப்பாணையில் வாதிகள் 5 பேரும், பிரதிவாதிகள் 2 பேரும் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். இந்த கூட்டுக் குறிப்பாணையை ஏற்று தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும். மற்ற வாதிகளில் 3 ஆம் வாதிக்கு மிகுந்த வயதாகிவிட்டது. 4 ஆம் வாதி வீட்டில் இருந்து வருவதாலும், 5 ஆம் வாதி ஹலிமத்துசலிமா பெங்களூரிலும், 6 ஆம் வாதி மெகருனின்ஷா கல்கத்தாவிலும் குடியிருந்து வருவதால் அவர்களால் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியவில்லை. இந்த சமாதான குறிப்பாணையில் உள்ள கையெழுத்துக்கள் அவர்களுடையது தான் என்று உறுதியளிக்கிறேன். கூட்டு சமாதான குறிப்பாணையின் அடிப்படையில் தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.